வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru.
In Collaboration with Provincial Department of Education
Northern Province
3rd Term Examination - 2020

FWC

கணக்கீடு
**Accounting**

Three Hours
Gr. 12 (2021)

| 33 | T | |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

- *01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.*
- *ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டது.*
- *உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.*

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

## பகுதி I

01. கணக்கீட்டின் நுட்பம் மற்றும் தொழில்சார் சூழல் மாறிகளைக் கொண்ட தொகுதி கீழ்வருவனவற்றுள் எது?
   1. கணினித் தொழில்நுட்பம், நவீன உபகரணபயன்பாடு, தொடர்பாடல் தொழில்நுட்பம்
   2. வட்டிவீதம், வரிக்கொள்கை, சந்தைநிலமைகள்
   3. கணக்கீட்டு நியமங்கள், கணக்கீட்டு நுட்பமுறைகள் கணக்கீட்டின் தொழில்சார் நிறுவனங்கள்.
   4. விலைமட்டம், நாணய மாற்றுவதம், அரசகொள்ளைகள்
   5. கணக்கீட்டு நியமங்கள், கணினித் தொழில்நுட்பம், நவீன உபகரணப் பயன்பாடு

- **02ம், 03ம், 04ம் வினாக்களுக்கு விடையளிக்க கீழ்வரும் தகவல்களைப் பயனப்படுத்துக.**

*01-01-2020 இல் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தில் ரூபா 800000 மூலதனத்துடன் சேயோன் என்பவர் வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். கீழ்வரும் கொடுக்கல்வாங்கள் நடந்தேறின.*

1. சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூபா 400000 பெறுமதியானவை சித்திவிநாயகர் நிறுவனத்திடம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
2. காசுக்கு கொள்வனவு செய்யப்பட்ட சுத்திகரிப்பு பொருட்கள் ரூபா 12000/-
3. வாகனங்கள் சுத்திகரிப்பின் மூலம் கிடைத்த காசு ரூபா 40000/- இதற்காக பயன்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு பொருட்களின் பெறுமதி ரூபா 7000/-
4. அரச மோட்டார் வாகனங்களை சுத்திகரித்ததன் மூலம் பெறவேண்டிய வருமானம் ரூபா 20000 பயன்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு பொருட்கள் ரூபா 3500/-
5. பெறுமானத் தேய்வு உட்பட ஏற்பட்ட செலவுகள் 10000/- ஆகும்.

02. *1ம், 2ம், 3ம், 4ம்* கொடுக்கல் வாங்கல்களுக்கான மூல ஏடுகள் எவை?
   1. பொதுநாட்குறிப்பு, காசுக்கொடுப்பனவுநாளேடு, காசுப்பெறுவனவு நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு.
   2. பொதுநாட்குறிப்பு, காசுக்கொடுப்பனவு நாளேடு, விற்பனை நாளேடு, கொள்வனவு நாளேடு.
   3. பொதுநாட்குறிப்பு, காசுகொடுப்பனவு நாளேடு, காசுப்பெறுவனவு நாளேடு, விற்பனை நாளேடு
   4. கொள்வனவு நாளேடு, காசுக்கொடுப்பனவுநாளேடு, பொதுநாட்குறிப்பு, பொது நாட்குப்பு
   5. பொதுநாட்குறிப்பு, காசுகொடுப்பனவுநாளேடு, காசுப்பெறுவனவு நாளேடு, பொதுநாட்குறிப்பு

03. 1ம், 3ம், 4ம் கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய மூல ஆவணங்கள் முறையே
1. நாட்குறிப்புக்கச்சாத்து, பற்றுச்சிட்டு, கொடுப்பனவுஉறுதிச்சீட்டு
2. கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு, நாட்குறிப்புக்கச்சாத்து
3. நாட்குறிப்புக் கச்சாத்து, விற்பனைப்பட்டியல், கொள்வனவுப்பட்டியல்
4. நாட்குறிப்புக் கச்சாத்து, பற்றுச்சீட்டு, பற்றுச்சீட்டு
5. நாட்கறிப்புக் கச்சாத்து, பற்றுச்சீட்டு, விற்பனைப்பட்டியல்

04. மேற்படி வணிகம் உழைத்த இலாபம் யாது?
1. ரூபா 29500/=  2. ரூபா 39500/=  3. ரூபா 19500/=
4. ரூபா 43000/=  5. ரூபா 19000/=

05. அமல், கமல் பங்குடமையில் உரிமையில் குறைவை ஏற்படுத்தும் கொடுக்கல்வாங்கல் கீழ்வருவனவற்றுள் எவை?
A) கமல் சொந்தத் தேவைக்கு பற்றிய பண்டங்களின் பெறுமதி ரூபா 50000/-
B) அமல் தனது சொந்தப்பணத்தில் இருந்து பங்குடமை சார்பாக செலுத்திய கட்டிடவாடகை ரூபா 40000
C) பங்காளர்களின் வருடாந்த சம்பளம் ரூபா 24000 ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.
D) பங்காளர் அமலின் வருடாந்தச் சம்பளம் ரூபா 24000 காசாக செலுத்தப்பட்டது.
E) கமலின் சொந்த ஆயுட்காப்புறுதிக்கட்டணம் ரூபா 20000 பங்குடமையால் செலுத்தப்பட்டிருந்து.
1. A யும் B யும்  2. B யும் Cயும்  3. C யும் Dயும்
4. D யும் Eயும்  5. Aயும் E யும்

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 6ம் 7ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

31-03-2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நடைமுறைக்கணக்கு

| விபரம் | பரத் | சரத் | விபரம் | பரத் | சரத் |
|---|---|---|---|---|---|
| 01-04-2018 மீதி / வந் | 50000 | - | 01-04-2018 மீதி/ வந் | - | 40000 |
| பற்று | 20000 | 50000 | சம்பளம் | 60000 | 20000 |
| மீதி /கீழ்/சென்றது | 60000 | 50000 | மூலதனவட்டி 10% | 40000 | 20000 |
| | | | இலாப பங்கு | 30000 | 20000 |
| | 130000 | 100000 | | 130000 | 100000 |

06. பங்காளரிடையே பங்குடமை ஒப்பந்தமொன்றை உருவாக்காது பங்குடமைக்கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவின் படி இவ்வணிகம் செயற்படுமாயின் 31-03-2019 இல் முடிவடையும் வருடத்திற்கான பரத்தின் இலாபப்பங்கு எவ்வளவு.
1. ரூபா 90000  2. ரூபா 95000  3. ரூபா 60000
4. ரூபா 25000  5. ரூபா 63000

07. 01.04.2019 இல் திலக் புதியபங்காளராக அனுமதிக்கப்படார் அவர் மூலதனமாக ரூபா 200000 ஐக் கொண்டுவந்தார். இத்திகதியில் நிறுவனத்தின் நன்மதிப்பு பெறுமதி ரூபா 120000 என மதிப்பிடப்பட்டது. சரத், பரத், திலக் இலாபநட்டங்களை சமனாக பங்கிடுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. நன்மதிப்புக் கணக்கினை திறக்காது சீராக்கம் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது எனக்கருதி புதிய பங்காளர் இணைக்கப்பட்ட பின்னர் பங்காளரது சரியான உரிமையாண்மை கீழ்வருவனவற்றுள் எது?

| | பரத் (ரூபா) | சரத் (ரூபா) | திலக் (ரூபா) |
|---|---|---|---|
| 1. | 460000 | 250000 | 160000 |
| 2. | 492000 | 258000 | 160000 |
| 3. | 426000 | 300000 | 200000 |
| 4. | 462000 | 300000 | 120000 |
| 5. | 426000 | 258000 | 160000 |

08. கழகம் ஒன்று *31.03.2020*இல் முடிவடைந்த வருடத்தில் *100* அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இவர்களில் *20* அங்கத்தவர்கள் *01.01.2020* இல் சேர்ந்தவர்களாவர் அங்கத்தவர்களுக்கான மாதாந்த சந்தா ரூபா 200/- ஆகும். ஆண்டுக்காலத்தில் கிடைத்த நன்கொடை ரூபா 80000/= ஆகும். நன்கொடையானது கிடைத்த வருடத்தில் இருந்து நான்கு ஆண்டுகளுக்கு சமமான தொகைகளில் வருமானமாக இனங்காணப்படும்.

31-12-2019 இல் 8% நிலையான வைப்புத் தொகை (1வருடம்) முதிர்ச்சியடைந்து கிடைத்த தொகை ரூபா 108000/= ஆகும் *31-03-2020* இல் முடிவடைந்த வருடத்தில் கழகத்தின் இனங்காணப்பட்ட வருமானம் யாது?

*1.* ரூபா 194000/=   2. ரூபா 198000/=   3. ரூபா 192000/=

4. ரூபா 218000/=   5. ரூபா 230000/=

09. நிறுவனமொன்றின் *2020* மார்ச் *31*இல் மொத்தச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முறையே ரூபா *200000*, *70000* ஆகும் இத்தொகையை கணித்தபின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

*2020* ஏப்ரலில் பொருட்களை விற்பதற்காக வாடிக்கையாளர் ஒருவரிடம் முற்பணமாக பெறப்பட்ட ரூபா *20000* ஆனது விற்பனையாக கருதப்பட்டு பதியப்பட்டுள்ளது.

*2020* மார்ச்மாதத்திற்கான மின்கட்டணம் ரூபா *6000* பதிவு செய்யப்பட்டவில்லை.

மேற்குறித்த தவறுகளை திருத்திய பின்னர் மொத்த பொறுப்புக்கள் தேறிய சொத்துக்கள் முறையே.

1. ரூபா 76000 ரூபா 50000   *2.* ரூபா *96000* ரூபா *110000*

3. ரூபா 90000 ரூபா 110000   *4.* ரூபா 90000 ரூபா 50000

5. ரூபா *96000* ரூபா *104000*

10. வரையறுத்த X,Y,Z கம்பனியின் *2019* மார்ச் *31* இல் உள்ள கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி கடன்பட்டோர் பேரேட்டுமீதியுடன் பின்வருமாறு இணங்கிக் காணப்பட்டன.

| | **"000" ரூபாவில்** |
|---|---|
| திருத்தமுன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு க/கு மீதி | 6000 |
| + அறவிடமுடியாக் கடனில் கூட்டிப் பதியப்பட்டது | 50 |
| திருத்திய கடன்பட்டோர் பேரேட்டு மீதி | 6050 |

மேற்கூறிய இணக்கக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை கருத்திற்கொள்ளாமல் வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. ஆண்டிற்கான இலாபம் மற்றும் *2019* மார்ச் *31* இல் உள்ளவாறான நடைமுறைச்சொத்துக்கள் முறையே ரூபா 200000/= ரூபா 800000/= ஆகும். மேற்படி தவறுகளைத் திருத்திய பின்னர் ஆண்டிற்கான இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் முறையே.

1. ரூபா 250000/= ரூபா 850000/=
2. ரூபா 100000/= ரூபா 600000/=
3. ரூபா 350000/= ரூபா 750000/=
4. ரூபா 250000/= ரூபா 950000/=
5. ரூபா 50000/= ரூபா 650000/=

11. நிறுவனமொன்றின் களஞ்சியத்தில் 2020-03-31 இல் ஏற்பட்ட தீயினால் இருப்புக்கள் முழுவதும் அழிவடைந்தன 2020.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | ரூபா "000" |
|---|---|
| 2019-04-01 இல் இருப்பு | 800 |
| கொள்வனவுகள் | 3000 |
| விற்பனைகள் | 6000 |
| விற்பனைத்திரும்பல் | 1000 |

இந்நிறுவனம் விற்பனை விலையின் மீது 25% மொத்த இலாபத்துடன் பொருட்களை விற்பனை செய்கின்றது. காப்புறுதி நிறுவனமானது அழிவடைந்த நட்டத்தில் 80% இனை செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது.

| | அழிவடைந்த இருப்பு கிரயம் ரூபா "000" | இருப்பு நட்டம் ரூபா "000" |
|---|---|---|
| 1. | 800 | 640 |
| 2. | 600 | 480 |
| 3. | 500 | 400 |
| 4. | 50 | 10 |
| 5. | 60 | 48 |

12. வணிகமொன்றில் 2020 யூன் 01 இல் சில்லறைக்காசுமீதி ரூபா 1200 ஆக காணப்பட்டது. 2020 மே மாதம் சில்லறைக் காசுக் காசுக்கட்டுப்பாட்டு க/குச் செலவு வைக்கப்பட்ட பகுப்பாய்வு நிரல்களின் மொத்தம் பின்வருமாறு

| | |
|---|---|
| துப்பரவாக்கும் செலவு | ரூபா 800 |
| எழுதுகருவிச் செலவு | ரூபா 300 |
| பிரயாணசெலவு | ரூபா 180 |
| பேரேடு க/கு | ரூபா 120 |

2020 யூன் மாதம் சில்லறைக்காசுக்கட்டுநிதி ரூபா 500ஆல் அதிகரிப்புச் செய்யப்பட்டதற்கேற்ப 2020 யூன் 01 இல் கட்டுநிதி மீள் நிரப்பப்படும் தொகை யாது

1. ரூபா 2700  2. ரூபா 1700  3. ரூபா 1900
4. ரூபா 3000  5. ரூபா 2480

13. பின்வரும் சமன்பாடுகளில் எது உற்பத்திக்கிரயத்தை தீர்மானிக்கபயன்படும்

1. மூலக்கிரயம் + மேந்தலைக்கிரயங்கள்
2. மூலப்பொருட்கிரயம் + தொழிற்சாலை மேந்தலைக் கிரயங்கள்
3. மூலக்கிரயம் + தொழிற்சாலை மேந்தலைக்கிரயத்தை
4. மூலப்பொருட்கிரயம் + நேர் கூலிக்கிரயம்
5. மூலக்கிரயம் + உற்பத்தியல்லா மேந்தலைக்கிரயம்

14. பின்வரும் தகவல்கள் நெல்சன் வியாபாரத்துடன் தொடர்புடையதாகும்.

| | 31.03.2020 | 01.04.2019 |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 750000 | 500000 |
| மொத்தப்பொறுப்புக்கள் | 350000 | 200000 |

உரிமையாளர் உறவினர்சார்பில் வங்கிக் வழங்கிய கடன் உத்தாரவாதம் ஒன்றிற்காக நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் இருந்து அறவிடப்பட்ட தொகை ரூபா *40000* *31.03.2020* இல் உள்ளபடியான சொத்துக்களில் உள்ளடங்கியுள்ள ரூபா *50000* கிரயமான இருப்பக்கள் விற்பனை செய்யப்பட்டபோதும் வாடிக்கையாளருக்கு இதுவரை விநியோகிக்கப்படவில்லை

*31-03-2020* இம்முடிவடைந்த வருடத்திற்கான மேற்படி வணிகத்தின் தேறிய இலாபம் அல்லது நட்டம்

1. ரூபா 50000  2. ரூபா 60000  3. ரூபா 90000
4. ரூபா 100000  5. ரூபா 140000

15. பின்வரும் கணக்கீட்டு எண்ணிக்கருக்களில் எது வருமானக்கூற்றில் ஒவ்வொரு காலத்திற்குமான பெறுமானத் தேய்வினை இனங்காணுகிறது.

*1.* இணைத்தல்  *2.* தொடர்ந்து இயங்குதல்  *3.* முன்னெச்சரிக்கை
*4.* தேறல்  *5.* அட்டுறு

- ***16ம், 17ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.***

அனைத்து காசுப் பெறுவனவுகளும், கொடுப்பனவுகளும் வங்கி மூலம் மேற்கொள்ளப்பட்டன.

*2020-01-31* இல் வங்கிக்கூற்றுப்படி மீதி ரூபா *40000* செலவுமீதியைக் காட்டியது இத்தினத்தில் காசுக்கட்டுப்பாட்டு கணக்குமீதியானது வேறுபட்டமைக்கான ஒரே ஒரு காரணம் வசூலிக்கப்படாத காசோலை ரூபா *5000* ஆகும்.

*2020* பெப்ரவரி மாதத்திற்கான தகவல்கள் வருமாறும்

| | |
|---|---|
| காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்தம் | ரூபா *120000* |
| காசுக் கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் | ரூபா *70000* |
| வங்கியால் வசூலிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி | ரூபா *96000* |
| வங்கியில் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி | ரூபா *53000* |

பெப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட விடுபாடுகளும் தவறுகளும் வருமாறு

| | |
|---|---|
| வங்கிக்கட்டணங்கள் | ரூபா *3000* |
| கடன்பட்டோர் நேரடி வைப்பு | ரூபா *2000* |

16. அ) மாற்றப்படாத (சமர்ப்பிக்கப்படாத) காசோலைகளின் பெறுமதி யாது?.................................................
ஆ) வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி யாது? ……………………………………………

17. திருத்திய காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியாது?

…………………………………………………………………………………………………..

18. பங்குடமை நிறுவனமொன்றின் கீழே தரப்பட்டுள்ள கணக்குகளுக்கு பொருத்தமான கணக்கு வகைப்படுத்தலைக் குறிப்பிடுக.

A- பங்காளர் நடைமுறைக்கணக்கு ……………………………………………………………….

B- பங்காளர் பங்குடமைக்கு வழங்கி கடன் கணக்கு ………………….……………………………

C- பங்காளர் பங்குடமைக்கு வழங்கிய கடனுக்கான வட்டிகணக்கு …………………………………...

D- பங்காளர் பங்குடமைக்கு வழங்கிய கடனுக்கான வட்டி நிலுவைக் கணக்கு....……………………..…

19. நிறுவனம் ஒன்றின் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியை கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் அதிகரிக்குமா அல்லது குறைக்குமா அல்லது மாற்றமின்மையை ஏற்படுத்துமா என குறிப்பிடுக.

(i) இயந்திரம் ஒன்றை கடனுக்கு கொள்வனவு செய்தல் …..……………………………………..

(ii) கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை…………………………………………………

(iii) காசுக் கொடுப்பனவு நாளேட்டின் கடன்கொடுத்தோர் நிரல் கூட்டிக் கூட்டப்படுதல்……………..

(iv) கடன்பட்டோர் பேரேட்டில் இருந்து கடன்கொடுத்தோர் பேரேட்டிற்கு மாற்றுதல்…………………..

- **20ம் *21*ம் வினாக்களுக்கு கீழ்வரும் பட்டியலை அடிப்படையாக கொண்டு விடையளிக்குக.**

## ATC Ltd

**பிரதான வீதி, யாழ்ப்பாணம்**

திகதி : *01-04-2020*

கட்டளை

இல : *667*

To அமுதாகளஞ்சியம்
கோண்டாவில்

**பட்டியல் இலக்கம் : *048910***

| | |
|---|---|
| *80* அப்பியாசப் புத்தகங்கள் ஒவ்வொன்று 20/= | 1600 |
| - வியாபாரகழிவு 25% | 400 |
| | 1200 |
| பெறுமதிசேர் வரி 10% (Vat) | ? |
| | ? |

குறிப்பு : *30* நாட்களுக்குள் பணம் செலுத்தப்படின் 2.5% காசுக்கழிவு வழங்கப்படும்

20. *(அ)* சேர்க்கப்படும் பெறுசேர் வரித்தொகையாது?

………………………………………………………………………………………………..

(ஆ) *30* நாட்களுக்குள் பணத்தைச் செலுத்தின் ATC நிறுவனத்தால் அனுமதிக்கப்படும் கழிவின் பெறுமதி யாது

………………………………………………………………………………………………………..

*21.* அமுதா களஞ்சியத்தின் ஏடுகளில் மேற்படி பட்டியல் கிடைத்தவுடன் மேற்கொள்ளப்படும் இரட்டைப் பதிவை எழுதுக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

*22.* கீழ்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதனை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

(i) "காசேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் கால அளவு எண்ணக்கருவினை வெளிக்காட்டும் ( )

(ii) "வணிகத்தின் வாழ்தன்மை தொடர்பாக நிச்சய மற்றநிலமைகள் காணப்படுமாயின் சொத்துக்கள் பொறுப்புக்கள் வகைப்படுத்தல் அவசியமில்லை ( )

(iii) "சொத்து ஒன்றுக்கான சட்டரீதியான உரிமை வணிகத்திற்கு இல்லாதபோதும் தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கருவின் அடிப்படையில் அச்சொத்து வணிகச் சொத்தாக காட்டப்பட முடியும் ( )

(iv) "எதிர்கால விற்பனைக்காக முற்பணம் பெற்றுக்கொள்ளல் தேறல் எண்ணக்கருவிற்கு அமைய வருமானமொன்றாக இனங்காணப்படும் ( )

*23.* வரலாற்றுக்கிரய எண்ணக்கரு பறக்கணிக்கப்படும் சந்தரப்பங்கள் இரண்டினைத் தருக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

விற்பனை அன்றேல் திரும்புக எனும் அடிப்படையில் வாடிக்கையாளருக்கு கொள்விலையில் 10% கூட்டி அனுப்பபட்ட பண்டங்களின் கிரயப்பெறுமதி ரூபா *54000* விற்பனையாக கருதப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கணிக்கப்பட்ட நிறுவனத்தின் வரைபு இலாபம் ரூபா *97000* ஆக காணப்பட்டது. பண்டங்களின் திரும்பி அனுப்பும் கால எல்லை இன்னமும் முடிவடையவில்லை.
இருப்புக்கணிப்பீட்டின் போது நிறுவனத்தில் பௌதிக ரீதியாக காணப்பட்ட இருப்புக்கள் கவனத்திற் கொள்ப்பட்டது.

*24.* மேற்படி தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவைத்தருக.

…………………………………………………………………………………………………………

*25.* மேற்படி தவறுகளைத் திருத்தியபின்னரான நிறுவனத்தின் தேறிய இலாபம் யாது?

…………………………………………………………………………………………………………

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01) இலாபநட்டங்களை *2:1* என பகிரும் மீனா, மீரா பங்குடமையில் இலாபநட்டத்தில் 1/5 பங்கு பெறும் நோக்குடன் *01-04-2018* தாராபுதியவராக சேர்ந்து கொண்டார். சேரும் திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா *300000/=* ஆக மதிப்பிடப்பட்டு நன்மதிப்புக் கணக்கினைப் பராமரிக்காது சீராக்கம் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படும் புதிய ஒப்பந்த விபரம் வருமாறு

1. மூலதன மீதிகளுக்கு வருடாந்தம் 10% வட்டி அனுமதிக்கப்படுகின்றது.
2. சகல பங்குதாரரும் சம்பளமாக வருடாந்தம் ரூபா *50000/=* பெறுவதற்கு உரித்துடையவர்கள்.
3. பங்காளர்களால் பங்குடமைக்கு வழங்கப்படும் கடன்களுக்கு 10% வட்டி வழங்கப்படல் வேண்டும்.
4. புதிய இலாபநட்டவிகிதம் மீனா, மீரா, தார என்போருக்கிடையில் முறையே 8:4:3 ஆகும்.

31-03-2019 இல் உள்ளவாறான பங்குடமையின் பரீட்சைமீதி வருமாறு

| கணக்கின் பெயர் | வரவு | செலவு |
|---|---|---|
| | "000" ரூபா | "000" ரூபா |
| *01-04-2018* இல் இருப்பு | 690 | |
| விற்பனை | | 3500 |
| ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்கள் (கொள்விலையில்) | 1000 | |
| கொள்வனவு | 2000 | |
| நடைமுறைக்கணக்கு மீனா | | 60 |
| மீரா | 10 | |
| மூலதனக்கணக்கு மீனா | | 1000 |
| மீரா | | 600 |
| மூலதனத்திற்கும் நன்மதிப்பக்குமான தாராவின் பங்களிப்பு | | 600 |
| கட்டிடவாடகை | 12 | |
| மின்கட்டணம் | 102 | |
| சம்பளமும் கூலியும் (தேறியது) | 90 | |
| ஏனைய வருமானம் | | 16 |
| கடன்கணக்கு மீனா | | 40 |
| *01-04-2018* இல் திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | 158 |
| வியாபார வருமதிகளின் எதிர்ப்பார்க்கை நட்டங்களுக்கான ஒதுக்கீடு | | 5 |
| வியாபார வருமதிகள் | 300 | |
| வியாபாரசென்மதிகள் | | 200 |
| 8% முதலீடுகள் | 400 | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 1575 | |
| | 6179 | 6179 |

**மேலதிக தகவல்கள்**

(i) *31-03-2019* இல் இருப்பின் கிரயப் பெறுமதி ரூபா 60000/= ஆக இருந்ததுடன் அதன் நிகர தேறத்தக்க பெறுமதி ரூபா 40000 ஆகும்.

(ii) வெளிநபர் ஒருவரிடம் மாதாந்த வாடகை ரூபா 4000/= ற்கு எடுக்கப்பட்ட கட்டிடம் ஒன்றிலேயே வணிகத்தின் நிர்வாகப்பகுதி இயங்கிவந்தது எனினும் *01-08-2018* இல் இருந்து மீனாவின் சொந்தக்கட்டிடத்திற்கு இடமாற்றப்பட்டது. மீனாவின் மாதாந்தவாடகை ரூபா *3000* இன்னமும் செலுத்தப்படவில்லை.

(iii) ஊழியர் சேமலாபநிதியத்திற்கு (EPF) ஊழியரின் பங்களிப்பு 10%, தொழில் தருநர் பங்களிப்ப 15%, நம்பிக்கை நிதியப் பங்களிப்பு (ETF) 3% ஆகும். இவ் ஆண்டுக்கான EPF, ETF ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

(iv) ஆண்டுக்காலத்தில் மதிப்புக்குறைப்பு நட்டமாக ரூபா *100000* பதிவளிக்கப்படல் வேண்டும். எஞ்சிய வருமதியாளர்களில் 5%ற்கு எதிர்பார்க்கை நட்டங்களுக்கான ஒதுக்கீடு மேற்கொள்ளபடுதல் வேண்டும்.

(v) ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்களில் உள்ளடங்கியுள்ள காணியின் பெறுமதி கிரயம் ரூபா 350000 ஆகும். நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு 10% நேர்கோட்டுமுறையில் பெறுமானத்தேய்விடப்படல் வேண்டும்.

(vi) பங்குடமை சார்பாக ரூபா 34000/= ற்கு மீரா விளம்பரப்படுத்தல் செலவினம் ஒன்றை ஏற்றிருந்தார். இத்தொகை மீள்நிரப்பப்படல் வேண்டும்.

(vii) முதலீட்டுவருமானம் ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை

வேண்டப்படுவது

அ) வருமானக்கூற்று (பகிர்வுகள் உட்பட)

ஆ) பங்காளர் மூலதனக்கணக்கு

இ) பங்காளர் நடைமுறைக்கணக்கு

02) வான்மதி றேடர்ஸ் ஆனது பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். பின்வரும் மீதிகள் *31-03-2020* இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்றில் இருந்து பிரித்தெடுக்கப் பட்டவையாகும்.

| | **“000” ரூபாவில்** |
|---|---|
| வியாபாரகடன்பட்டோர் | *50* |
| காசும் காசுக்கு சமமானவையும் | *150* |
| வியாபார கடன்கொடுத்தோர் | *170* |
| அட்டுறு செலவினங்கள் | *70* |
| சென்மதி பெறுமதிசேர்வரி | *5* |
| ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்கள் | *400* |
| இருப்புக்கள் | *200* |

*2020* ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள், நிகழ்வுகள் வருமாறு VAT வீதம் 15% எனக் கொள்க.

கொடுக்கல்வாங்கல்
இலக்கம்

*(1)* ரூபா *15000* கிரயமான பண்டங்கள் VAT உள்ளடங்கலாக ரூபா 23000/= ற்கு சுந்தருக்கு விற்பனைசெய்யப்பட்டது.

(2) ரூபா 80000 கிரயமான பண்டங்கள் ரூபா 138000/= ற்கு (VAT உள்ளடங்கலாக) கோபிக்கு விற்பனை செய்யப்பட்டது.

(3) கோபியினால் திருப்பி அனுப்பப்பட்ட பண்டங்களின் கிரயப் பெறுமதி ரூபா 20000/=

(4) பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக மலரிடம் கொள்வனவு ரூபா 69000

(5) கடன்பட்டோரிடம் இருந்து கிடைத்த காசு ரூபா 23000

(6) மலருக்கு கொடுக்க வேண்டிய தொகையில் 1/3 பகுதி காசோலை மூலம் கொடுக்கப்பட்டது.

(7) ஏப்ரல் 2020 இல் ஏற்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 12000/= உள்ளடங்கலாக அனைத்து செலவின நிலுவைகளும் கொடுத்துத்தீர்க்கப்பட்டன.

(8) ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்களுக்கான வருடாந்த பெறுமானத்தேய்வு 6% ஆகும்.

**வேண்டப்படுவது**

அ) 08 வரையான உருப்படிகளின் தாக்கத்தினை (பெறுமதிகளுடன்) காட்டுவதுடன். ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்குமாயின் (+) எனவும் குறைவடையுமாயின் (-) எனவும் அந்தந்த பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக.

(15 புள்ளிகள்)

| கொ.வாங் இலக்கம் | சொத்துக்கள் '000' ரூபா | | | | பெறுப்புக்கள் '000' ரூபா | | | '000' உரிமை யாண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி உபகரணம் | இருப்புக் கள் | வியாபார வருமதி கள் | காசும் காசுக்கு சமமான வையும் | வியாபார கடன் கொடுத்தோ ர் | அட்டுறு செலவுகள் | சென்மதி VAT | |
| மீதி | 400 | 200 | 50 | 150 | 170 | 70 | 5 | -- |
| (1) | | | | | | | | |
| (2) | | | | | | | | |
| இறுதி மீதி | | | | | | | | |

ஆ) 2020 ஏப்பிரல் 30 இல் முடிவடைந்த மாதகாலப் பகுதிக்கான வருமானக்கூற்று

(5 புள்ளிகள்)

03) இந்திரா விளையாட்டுக் கழகத்தின் ஏடுகளில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு 31-12-2018 இல் நிதிநிலமைக்கூற்று

| | "000" ரூபாவில் |
|---|---|
| **நடைமுறைச் அல்லாச்சொத்து** | |
| மோட்டார் உருளை (அரைப்பங்குரிமை) | 600 |
| பாவனையில் உள்ள விளையாட்டு உபகரணம் | 700 |
| **நடப்புச் சொத்து** | |
| விற்பனை செய்யப்படாத புதிய விளையாட்டு உபகரணம் | 1000 |
| வாடகை (2 மாதம்) | 200 |
| சந்தா 2018ம் வருடம் | 60 |
| தேநீர்ச்சாலை இருப்பு | 800 |
| வங்கிமீதி | 1210 |
| | 4570 |

| | |
|---|---|
| திரண்டநிதி | 2900 |
| ஆயுட்சந்தா | 1400 |
| காப்புறுதி (3 மாதம்) | 150 |
| சந்தா – 2019ம் ஆண்டு | 120 |
| | 4570 |

31.12.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்காலத்தில் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் வருமாறு

| | "000" ரூபாவில் |
|---|---|
| **பெறுவனவுகள்** | |
| சந்தா - 2018 | 40 |
| - 2019 | 1100 |
| - 2020 | 80 |
| ஆயுள்சந்தா | 200 |
| புதியவிளையாட்டு உபகரணவிற்பனை | 900 |
| பாவித்த விளையாட்டு உபகரணவிற்பை | 14 |
| தேநீர்ச்சாலை விற்பனை | 4660 |
| | 6994 |
| **கொடுப்பனவுகள்** | |
| வாடகை (12 மாதத்திற்காக) | 1200 |
| காப்புறுதி (18 மாதங்களிற்காக) | 900 |
| விளையாட்டு உபகரண விநியோகஸ்தர் | 1000 |
| தேநீர்ச்சாலை விநியோகஸ்தர் | 1900 |
| தேநீர்ச்சாலை முகாமையாளர் சம்பளம் | 2000 |
| மோட்டார் உருளை திருத்த மொத்தச் செலவு | 450 |
| | 7450 |

**மேலதிக தகவல்கள்**

(i) 01-01-2015 இல் ரூபா 2000000ற்கு நேரு விளையாட்டுக்கழகத்துடன் சேர்ந்து மோட்டார் உருளை கொள்வனவ செய்யப்பட்டது. இதன் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்கள். மோட்டார் உருளையுடன் தொடர்புடைய அணைத்துச் செலவுகளையும் இருகழகங்களும் சமமாக பங்கிடுவதென இணக்கம் காணப்பட்டிருந்தது.

(ii) ஆயுட் சந்தா திட்டம் 5 வருடங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்டதாகும் 31-12-2018 வரை இத்திட்டத்தில் 10 அங்கத்தவர்கள் இணைந்திருந்தனர். அங்கத்தவர் ஒருவர் ரூபா 200000 ஐச் செலுத்தி இத்திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும் ஆயுட்சந்தாவனது 10 ஆண்டுகளுக்கு சமமான வருமானமாக இனங்காணப்படும்.

(iii) நான்கு அங்கத்தவர்கள் தலா 20000/= படி ஆண்டுக்கான சந்தாவை தருவதாக உறுதியளித்திருந்தனர் ஆனால் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை. நிலுவைச் சந்தாவானது ஆகக்கூடியது 12 மாதங்களுக்கு முன் கொண்டு செல்லப்படும்.

(iv) புதிய விளையாட்டு உபகரணங்கள் கொள்விலையில் 50% கூட்டி அங்கத்தவர்களுக்கு விற்பனை செய்யப்படும் பாவித்த விளையாட்டு உபகரணங்கள் புத்தகப் பெறுமதியில் அங்கத்தவர்களுக்கு விற்பனை செய்யப்படும். இவ்வருடம் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களில் அரைவாசி மீள் விற்பனைக்கும் மீதி கழகப்பாவனைக்குமாகும். 31-12-2019 இல் பாவனையில் உள்ள விளையாட்டு உபகரண மீதி ரூபா 700000/= ஆகும்.

(v) 31-12-2019 இல் தேநீர்ச்சாலை இருப்பு ரூபா 850000/= தேநீர்ச்சாலை விநியோகஸ்தருக்கு செலுத்தவேண்டியது 80000/=

**வேண்டப்படுவது**

அ) புதிய விளையாட்டு உபகரண விற்பனை இலாபம்

ஆ) 2019ம் ஆண்டிற்கான

i. சந்தாக் கணக்கு

ii. ஆயுட்சந்தாக்கணக்கு

இ) 31-12-2019 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கழகத்தின் வருமானக்கூற்று.

ஈ) 31-12-2019 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று

(20 புள்ளிகள்)

04) 01.01.2020 ஆரம்பிக்கப்பட்ட சாந்திவணிகத்தின் பயிலுனரான கணக்கு பதிவாளரால் தயாரிக்கப்பட்ட கணக்கறிக்கைகள் விபரம் வருமாறு

**காசுப் பெறுவனவு நாளேடு**

| திகதி | விபரம் | காசோலை இலக்கம் | கொடுத்த கழிவு | பெறுமதி | பகுப்பாய்வு நிரல் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | க. பட் | விற்பனை | ஏனைய பெறுவனவு |
| 01.01.2020 | மூலதனம் | - | - | 60000 | - | - | 60000 |
| 03.01.2020 | விற்பனை | 3036 | - | 16000 | - | 16000 | - |
| 10.01.2020 | சேந்தன் | 4031 | 600 | 8000 | 8000 | - | - |
| 18.01.2020 | விற்பனை | - | - | 20000 | - | 20000 | |
| 24.01.2020 | சாந்தன் | 1721 | 800 | 12000 | - | 12000 | |
| 30.01.2020 | விற்பனை | 2126 | - | 10000 | - | 10000 | |
| | | | 1400 | 126000 | 8000 | 50000 | 60000 |

**காசுக்கொடுப்பனவு நாளேடு**

| திகதி | விபரம் | காசோலை இலக்கம் | பெற்ற கழிவு | பெறுமதி | பகுப்பாய்வு நிரல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | க.கொடுத்தோர் | கொள்வனவு | செலவு | ஏனைய கொடுப்பனவு |
| 05.04.2020 | வாடகை | 1131 | | 3000 | - | - | 3000 | - |
| 08.01.2020 | ரஜனி | 1132 | 800 | 10000 | 10000 | | | |
| 10.01.2020 | விளம்பரம் | 1133 | - | 3500 | | | 3500 | |
| 18.01.2020 | கொள்வனவு | 1134 | - | 2000 | - | 2000 | | |
| 20.01.2020 | கஜன் | 1135 | 700 | 7000 | 7000 | | | |
| 28.01.2020 | மின்கட்டணம் | 1136 | | 6500 | | | 6500 | |
| 29.01.2020 | பற்று | 1137 | | 5000 | | | | 5000 |
| | | | 1500 | 37000 | 17000 | 2000 | 10000 | 5000 |

*2020 தைமாத முடிவில் வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக்கூற்று விபரம்*

| **திகதி** | **விபரம்** | **வரவு** | **செலவு** | **மீதி** |
|---|---|---|---|---|
| 01.01.2020 | காசுவைப்பு | | 60000 | 60000 |
| 08.01.2020 | காசோலை இலக்கம் *3036* | | 16000 | 76000 |
| 08.01.2020 | காசோலை இலக்கம் *1131* | 3000 | - | 73000 |
| 10.01.2020 | காசோலைப் புத்தகக்கட்டணம் | 300 | - | 72700 |
| 11.01.2020 | காசோலை இலக்கம் *1132* | 10000 | | 62700 |
| 13.01.2020 | நேரடிவைப்பு | | 16000 | 78700 |
| 14.01.2020 | காசோலைஇலக்கம் *4031* | | 8000 | 86700 |
| 15.01.2020 | காசோலைஇலக்கம் *1133* | 3500 | | 83200 |
| 18.01.2020 | காசு | | 20000 | 103200 |
| 20.01.2020 | வங்கிக்கட்டணம் | 300 | | 102900 |
| 28.01.2020 | காசோலை இலக்கம் *1135* | 7000 | | 95900 |
| 30.01.2020 | வைப்பு வட்டி | | 8000 | 103900 |
| 30.01.2020 | காசோலை இலக்கம் *1136* | 6500 | | 97400 |

**காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| ஏனைய பெறுவனவு | 60000 | கடன்கொடுத்தோர் | 17000 |
| விற்பனை | 50000 | கொள்வனவு | 2000 |
| கடன்பட்டோர் | 8000 | செலவு | 10000 |
| | | ஏனையசெலவு | 5000 |
| | | மீதி சென்றது | 84000 |
| | 118000 | | 118000 |

**வேண்டப்படுவது**

*அ)* *2020* தைமாதத்திற்கான திருத்திய காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு

ஆ) தைமாதத்திற்கான வங்கிக்கணக்கினக்கக்கூற்று

மேலே வினா அ வில் குறிப்பிடப்பட்டுள்ள காசுப்பெறுவனவு, கொடுப்பனுவு நாளேட்டையும் பின்வரும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்குக.

**விற்பனை நாளேடு**

| திகதி | விபரம் | பெறுமதி |
|---|---|---|
| 06.01.2020 | சேந்தன் | 2000 |
| 20.01.2020 | சாந்தன் | 30000 |
| | பொதுப்பேரட்டுக்கு மாற்றியது | 32000 |

**கொள்வனவு நாளேடு**

| திகதி | விபரம் | பெறுமதி |
|---|---|---|
| 02.01.2020 | ரஜனி | 17000 |
| 10.01.2020 | சஜன் | 12000 |
| | பொதுப்பேரேட்டுக்கு மாற்றியது | 19000 |

**மேலதிக தகவல்கள்**

i) சேந்தனுக்கு விற்பனை ரூபா 20000 ஆகும்.

ii) ரஜனிக்கு வழங்கப்பட்ட காசோலை ரஜனியின் தனிப்பட்ட கணக்கில் பதியப்பட்டவில்லை

iii) பெற்ற கழிவு நிரலின் கூட்டுத் தொகை கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

iv) 24-01-2020 இல் சாந்தனிடம் இருந்து பெற்ற தொகை தவறுதலாக காசுப் பெறுவனவு நாளேடின் விற்பனை எனும் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது**

1) திருத்தமுன் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுப் பாட்டுக் கணக்குகள்

2) திருத்திய கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுகொடுக்கல்

3) திருத்திய கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு மீதியில் இருந்து திருத்தமுன் கடன்கொடுத்தோர் பட்டியல் மீதியைக் கணிப்பிடுக.

05) சிமித் என்பவர் பழையதளபாடங்களையும், பொருத்திகளையும் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் சிறிய வணிகமொன்றை நடாத்திவருகின்றார். அவர் பூரணப்படுத்தப்பட்ட கணக்கேடுகள் எதனையும் பேணவில்லை 01 ஏப்பிரல் 2019 இல் நிறுவனத்தின் ஏடுகளில் காணப்பட்ட மீதிகள் வருமாறு

| | |
|---|---|
| தளபாடபொருத்து இருப்பு | 3210 |
| வியாபார கடன்பட்டோர் | 2643 |
| வியாபார கடன்கொடத்தோர் | 1598 |
| மோட்டார் வாகனம் | 5100 |
| கடைப்பொருத்திகள் | 4200 |
| நிலுவை விநியோக செலவு | 432 |

31 மார் - 2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு வருமாறு

| | | | |
|---|---|---|---|
| மீதி / கீழ்/ வந்தது | 2420 | கடன்கொடுத்தோர் | 22177 |
| கடன்பட்டோர் | 44846 | ஏனைய செலவு | 7942 |
| விற்பனை | 3921 | ஏனைய கொடுப்பனவு | 19293 |
| | | மீதி/ கீழ்/சென்றது | 1775 |
| | 51187 | | 51187 |

ஏனைய செலவு விபரம்

| | |
|---|---|
| மின்சாரக்கட்டணம் | 1090 |
| தொலைபேசி | 360 |
| வாடகை | 2000 |
| விளம்பரம் | 1430 |
| காப்புறுதி | 946 |
| விநியோக செலவு | 2116 |
| | 7942 |

ஏனையகொடுப்பனவு விபரம்

| | |
|---|---|
| கடைப்பொருத்திகள் | 2550 |
| பற்றுக்கள் | 16743 |

பின்வரும் மேலதிக தகவல்களையும் கருத்திற் கொள்க.

1. மோட்டார் வாகனங்களுக்கும், கடைப்பொருத்திகளுக்கும் (இவ்வாண்டு கொள்வனவு செல்லப்பட்டவற்றுக்கும் சேர்த்து) புத்தகப் பெறுமதியில் முறையே 20%, 10% பெறுமானத் தேய்விடுக.
2. 31 மார் - 2020 இல் நிலுவை விநியோகச் செலவு 291, முற்பண காப்புறுதி 177
3. இவ் ஆண்டு காசுக்கு கொள்வனவு செய்த கடைப்பொருத்திகளில் சிமித்தின் சொத்தப்பாவனைக்கான ரூபா 250/= பெறுமதியான அலுமாரியும், மீள்விற்பனைக்கான ரூபா 300/= பெறுமதியான மேசையும் உள்ளடங்கும்.
4. 31 மார்ச் 2020இல் மீதிகள்

| | |
|---|---|
| வியாபார கடன்பட்டோர் | 4012 |
| வியாபார கடன்கொடுத்தோர் | 2445 |
| தளபாடபொருத்தி இருப்பு | 4063 |

**வேண்டப்படுவது**

(அ) 31 மார்ச் 2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று

(ஆ) 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று

06) (அ) (1) ஆடைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடைய 31-03-2019 இல் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

| | "000" ரூபா |
|---|---|
| மூலப்பொருட்கொள்வனவு | 1000 |
| நேர்கூலிகள் | 300 |
| தொழிற்சாலைமேந்தலை | 400 |
| மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | 50 |
| குறைவேலை இருப்பில் ஏற்பட்ட தேறிய குறைவு | 150 |
| முடிவுப்பொருள் இருப்பில் ஏற்பட்ட தேறிய குறைவு | 100 |

வேண்டப்படுவது

i) உற்பத்திக்கிரயம்

ii) விற்பனைக்கிரயம் (5 புள்ளிகள்)

(2) மேற்படி நிறுவனம் உற்பத்தி, விற்பனைக்கிரயங்களை கணிப்பிடும்பொழுது பின்வரும் மேலதிக தகவல்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை.

- சரியானகையாழுதல் இல்லாமையினால் ரூபா 40000 பெறுமதியான மூலப்பொருட்கள் முழுமையாக அழவடைந்திருந்தன.
- உற்பத்தி இயந்திரங்களுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 30000/= விடுபட்டிருந்தது.
- உற்பத்தியுடன் தொடர்பான பதியப்படாத மின்கட்டணங்கள் ரூபா 60000/=
- உற்பத்தி மேந்தலைக் கிரயமானது அலுவலக வாடகை ரூபா 40000ஐ உள்ளடக்கியுள்ளது.
- இக்காலப்பகுதி முடிவிலுள்ள குறைவேலையானது ரூபா 30000 குறைந்தெழுதப்பட்டிருந்தது.
- இக்காலப்பகுதியன் தொடக்கத்திலுள்ள முடிவுப்பொருள் இருப்புக் கிரயமானது ரூபா 70000 குறைத்தெழுதப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது**

i) திருத்திய உற்பத்திக்கிரயம்?

ii) திருத்திய விற்பனைக்கிரயம்? (6 புள்ளிகள்)

(3) விற்பனை ரூபா 2000000/= விநியோகச் செலவுகள் ரூபா 40000/= எனக் கருதி நிறுவனத்தின் தேறியலாபத்தை / நட்டத்தைக் கணிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ஆ) ஒவ்வொருவருடமும் மார்ச் 31 இல் ஏடுகளை மூடுகின்ற சரவணா கம்பனியின் எழுதுவினைஞர் 2019 மார்ச் 31 இல் பின்வரும் சீராக்கங்களை முன்வைக்கின்றார்.

1) வாடகை வருமானமாக கிடைத்த ரூபா 12000 சாசோலை மறுக்கப்பட்டமை தொடர்பான பதிவுகள் இன்னமும் சீராக்கம் செய்யப்படவில்லை.

2) 30-06-2019 இல் முடிவிடையும் ஓர் ஆண்டிற்காக செலுததப்பட்ட காப்புறுதிக்கட்டணம் ரூபா 15000 காப்புறுதிக் கணக்கு வரவு வைப்பட்டது.

3) இருப்புப் பதிவிடலின்படி 31-03-2019 இல் இருப்பின் பெறுமதி ரூபா 50000 ஆகும். எவ்வாறாயினும் பௌதீக இருப்புக்களைப் பார்வையிட்டதில் ரூபா 15000 பெறுமதியான இருப்புக்கள் முழுமையாக அழிந்துள்ளன என்பதனை அறியக்கூடிதாக இருந்தது.

மேற்படி சீராக்கங்களுக்கு அவசியமான நாட்குறிப்பு பதிவுகளைத் தருக.

(6 புள்ளிகள்)